**செய்தி வெளியீடு எண்.695** **நாள்.29.10.2007**

## செய்தி வெளியீடு

## அருள்மிகு சத்யசாய் அறக்கட்டளை சார்பில் சாய்நகர் குடிசை வாழ்மக்களுக்குக் குடிநீர் வழங்கும் பணி

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்

அருள்மிகு சத்யசாய் அறக்கட்டளை சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்குவதில் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளது. கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் மூலம் கிடைக்கும் நீர் சேதாரமின்றியும், விரைந்தும் சென்னைக்குக் கிடைப்பதற்கு வசதியாக ஆந்திர மாநிலப் பகுதியில் 250 கோடி ரூபாய் செலவில் கால்வாய்ச் சீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியதுடன், தமிழகப் பகுதிகளிலும் கால்வாய்ச் சீரமைப்புப் பணிகளை நிறைவேற்றி வருகிறது.

தற்போது சென்னைக் குடிநீர் வாரியத்தில் இருந்து குடிநீரைப் பெற்று 116வது வார்டு பகுதியில் உள்ள சாய்நகர் மக்களுக்குச் சிந்தாமல் சிதறாமல் குடிநீர் வழங்கக்கூடிய 9 இலட்சம் மதிப்பிலான குடிநீர் வாகனம் ஒன்றை அருள்மிகு சத்யசாய் அறக்கட்டளை வழங்குகிறது.

இந்த வாகனத்தில் 15 பேர் ஒரே நேரத்தில் குடங்களை மேடையில் வைத்துக் குழாய் மூலம் குடிநீர் பெறலாம். இதற்கேற்ப வாகனத்தின் இரண்டு பக்கங்களிலும், பின்புறமும் குடங்களை வைக்கக்கூடிய அளவிற்கு மேடையுடன் கூடிய குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**இந்த வாகனத்தின்மூலம் சாய்நகர் பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தைத் தலைமைச் செயலகத்தில் இன்று (29.10.2007) நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்.**

**இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க. ஸ்டாலின், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு க. பொன்முடி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.என். நேரு, மாண்புமிகு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு ஆ. ராசா, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு தீனபந்து, சத்யசாய் அறக்கட்டளையைச் சார்ந்த திரு. சீனிவாசன், திரு ரமணி, ஆகியோர் உடனிருந்தனர்.**

********

**வெளியீடு:**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.